**DVC.NO. 01/2022** **தேதி: 11.03.2026**

**<u>அசா 2 திரு. தட்சிணாமூர்த்தி த/பெ பெரியசாமி நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1–6 எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் எந்த நிறுவனத்திலோ, தனி நபரிடமோ ஓட்டுநராக பணிபுரியவில்லை என்றால் சரிதான். மனுதாரர் மற்றும் எதிர் மனுததாரர் குடும்பம் பற்றி தெரியுமா என்றால் மனுதாரர் குடும்பத்தை பற்றி தெரியும். மனுதாரர் எனது உறவினர் அல்ல. மனுதாரர் குடும்பத்தை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் நான் மனுதாரர் குடும்பத்திற்கு உழவுக்காக டிராக்டர் ஓட்டி கொண்டிருந்தேன். எனது சொந்தஊரர் பவனமங்கலம் இல்லை என்றால் சரிதான். எனது ஊர் ரெங்கநாதபுரம். எனது ஊரிருக்கும் மனுதாரர் ஊரிருக்கும் சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். எனக்கு சொந்தமாக டிராக்டர் கிடையாது. மனுதாரர் குடும்பத்திற்கு உழவுக்காக ஓட்டினேன். நான் 1985 ல் மனுதாரர் குடும்பத்திற்காக உழவு ஓட்டினேன். நான் யாருடைய நிலத்தில் உழவு ஓட்டினேன் என்றால் மனுதாரர் தந்தை பெயரில் உள்ள நிலத்தில் உழவு ஓட்டினேன். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. சுமார் 3 ஏக்கர் இருக்கும். அந்த 3 ஏக்கரும் ஒரே இடத்தில் உள்ளது. அந்த நிலம் சாலையின் மேல்புறத்திலே அமைந்துள்ளது.

2. மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்கும் திருமண பேச்சு வார்த்தையும் திருமண நிச்சாயதார்த்தம் டகுறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மனுதாரர் தந்தை கூறிதான் தெரியும். மனுதாரருக்கு திருமணத்தில் எவ்வளவு சீர்வரிசை செய்தார்கள் என்றோ நகைகள் போட்டார்கள் என்றோ எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் தந்தை கூறி தெரியும். மனுதாரருக்கு 75 பவுன் நகையும், 3 1/2 கிலோ வெள்ளி, Honda city கார் , திருமண செலவுகள் அனைத்தும் மனுதாரர் வீட்டாரே செய்ததாக மனுதாரர் தந்தை சொன்னார். மேற்படி நகைகளை எங்கு வாங்கினார்கள், அவை என்னென்ன நகைகள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி காரின் வாகன எண் குறித்து தெரியுமா என்றால் தெரியாது.

3. மனுதாரர் திருமணத்திற்கு பிறகு எத்தனை நாட்களில் அவர் பிறந்த வீட்டிற்கு வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் 5–6 மாதங்களில் வந்து வீட்டார். நான் வேலைக்கு செல்லவில்லை. ஓட்டுநராக வேலை செய்கிறேன். எப்போதும் மனுதாரர் வீட்டில் இருப்பேனா என்றால் நான் அவ்வப்போது வாகனம் ஓட்டுவதற்காக வருவேன். மனுதாரர் வீட்டிற்கு நான் ஆம்பசிட்டர் கார் ஓட்டுவதற்காக வருவேன். அந்த வாகன எண் TN 49 AF 9199 ஆகும். அந்த வாகனம் மனுதாரர் தந்தை ராமமூர்த்தி என்பவர் பெயரில் உள்ளது. அவர் பள்ளி

ஆசிரியராக பணிபுரிந்தார். மனுதாரர் திருமண சமயத்தில் பணிஓய்வு பெற்றுவிட்டார். எனது நிருபண வாக்குமூலத்தில் மனுதாரரின் தந்தை பஞ்சாயத்து பேச கும்பகோணத்திற்கு தன்னை அழைத்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் அது எந்த தேதி என்றால் எனக்கு ஞாபகமில்லை. அப்போது என்னுடன் சேர்த்து 5–6 நபர்கள் வந்தார்கள். வந்தவர்களில் 2 பேர் பெயர் மட்டும் எனக்கு தெரியும், மற்ற நபர்களின் பெயர் தெரியாது. கும்பகோணத்தில் 1ம் எதிர் மனுதாரர் வீட்டில் வைத்து பஞ்சாயத்து பேசினோம். அது எந்த பகுதி என்று எனக்கு தெரியாது. அப்போது எதிர் மனுதாரர் குடும்பத்தில் யார் யார் இருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தேன்மொழி,கார்த்தி, எழுத்தறிநாதன், பீரித்தி மற்றும் சிலர் இருந்திருப்பார்கள். சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள். அப்போது எழுத்து மூலமாக ஏதாவது எழுதி கொண்டார்களா என்றால் எனக்கு அது குறித்து தெரியாது.

4. பஞ்சாயத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மனுதாரர் திருவையாறு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த போது நானும் உடன் சென்றேனா என்றால் சென்றேன் . ஆனால் காவல்நிலையத்திற்குள் செல்லவில்லை , வெளியே நின்றிருந்தேன். அவர் எப்போது புகார கொடுத்தார் என்று தேதி எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக என்னென்ன தேதிகளில் விசாரணை நடந்தது என்றால் எனக்கு தெரியாது. புகார் கொடுத்த விவரம் , அது சம்மந்தமான விசாரணை மற்றும் அப்போது நடத்தபட்ட பேச்சு வார்த்தைகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் , மனுதாரர் தந்தை கூறிதான் தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வது மனுதாரர் குடும்பத்தார் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் நான் மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த மனுவிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.